# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

***********

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

******

முறையீட்டு மனு எண்.250/2017 நகராட்சி
ஆணை நாள். 22–07–2019.

திரு.பெரி.மெ.ப. பழனியப்ப செட்டியார்,
த/பெ திரு. சுப்பிரமணியன் செட்டியார்,
பரம்பரை அறங்காவலர்,
அருள்மிகு இளமையாக்கினார் திருக்கோவில்,
சிதம்பரம்,
கடலூர் மாவட்டம்–608 001. -- முறையீட்டு மனுதாரர்.

ஆணையர்,
சிதம்பரம் நகராட்சி மற்றும்
நகராட்சி அலுவலர்கள்,
சிதம்பரம் நகராட்சி. -- எதிர் மனுதாரர்கள்.

ஆணை.

கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகராட்சி பகுதியினைச் சேர்ந்த அருள்மிகு இளமையாக்கினார் திருக்கோவில் பரம்பரை அறங்காவலர் திரு.பெரி.மெ.ப.பழனியப்ப செட்டியார் என்பவரது 30.11.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 15.12.2017 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.250/2017 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் சிதம்பரம் நகராட்சிப் பகுதியில் உள்ள இளமையாக்கினார் திருக்கோவிலுக்கு சொந்தமான குளத்தின் மேற்கு பகுதி திறந்த வெளி சாக்கடையால் குளம்நீர் மாசடைவதாகவும், மேற்படி சாக்கடை மூலம் சிறுநீர் மற்றும் மாட்டுக் கழிவுகள் செல்வதாகவும், குளத்தின் வடகரையில் கனரக வாகனங்கள் நிறுத்தப்படுவதால் இப்பகுதியில் சிறுநீர் கழித்தல், மாடுகளை கட்டி வைத்தல் போன்ற நிகழ்வுகளால் சுகாதார கேடு ஏற்படுவதாகவும், தென்கரையில் வாகனங்கள் நிறுத்தல், குப்பைகள் கொட்டுதல், குதிரைகளை கட்டிவைத்தல், மற்றும் குளத்தின் கிழக்குப் பக்கம் உள்ள கரையில் அதிக ஆக்கிரமிப்புகள், கால்நடைகளின் கழிவுகளை மேற்படி குளத்தில் கொட்டுவதால் குளம் பழுதாகி உள்ளதாகவும் சுகாதார கேடுகள் ஏற்படுவதாகவும் இது குறித்து நடவடிக்கை எடுக்க 01.11.2017 அன்று சிதம்பரம் நகராட்சி ஆணையரிடம் மனு கொடுத்தாகவும், 26.11.2017 அன்று பெய்த பெருமழையின் காரணமாக பாதாள சாக்கடை நுழைவு வாயில் மூலமாக கழிவு நீர் பொங்கி மனிதக் கழிவுடன் குளத்தில் செல்வதாகவும், இது வரை நகராட்சி மூலம் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவித்து விசாரணை கோரி தனது மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

10.01.2018 நாளிட்ட சிதம்பரம் நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கையில் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள சேதமடைந்துள்ள மழை நீர்த் தொட்டியினை புதியதாக கட்டி குளத்திற்கு கழிவு நீர் செல்லாமல் மழைநீர் செல்லும்படி அமைக்கப்பட்டு விட்டதாகவும், இளமையாக்கினார் கோவில் குளக்கரையில் உள்ள சாக்கடைகள் துார் வாரப்பட்டுள்ளதாகவும், திறந்தவெளியில் மலஜலம் கழிக்ககூடாது என்பதற்காக கிழக்குக் கரையில் சமுதாய கழிவறை கட்டப்பட்டு அது நகராட்சி மூலம் பராமரிக்கப்படுவதாகவும், மேலும் குதிரை, மாடு வளர்ப்பவர்களுக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டு கண்காணிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி இளமையாக்கினார் கோயில் குளம் கீழ்க்கரையில் நகராட்சி குழந்தைகள் சத்துணவு மையக் கட்டிடம், அப்பகுதி குழந்தைகளுக்காகவும் மற்றும்

கட்டணக் கழிப்பறை பொதுமக்களின் பயன்பாட்டிற்காகவும் மட்டுமே கட்டப்பட்டுள்ளது எனவும் வேறு எந்தவிதமான ஆக்கிரமிப்புகளும் மேற்படி இடத்தில் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

09.04.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தில் 20.11.2017 நாளிட்ட தனது மனுவில் தெரிவித்துள்ள புகார்கள் குறித்து எதுவும் சரிசெய்யப்படவில்லை எனவும், சாக்கடை கழிவு நீர் தெப்பக்குளத்தில் விழுவதை தடுப்பதற்காக 4 அடி நீளம், 4 அடி அகலத்தில் ஒரு தொட்டி மட்டும் கட்டியுள்ளதாகவும், நகராட்சி மூலம் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ள எந்த செயல்களும் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரர் தனது 07.02.2019 நாளிட்ட கடிதத்தில் மேற்படி இளமையாக்கினார் கோயில் குளத்தில் தூர் வாரும் பணிக்கான தடையின்மை சான்றினை வேறு நபர்கள் பெயரில் நகராட்சி கடித ந.க.எண். 2248/2018/இ.1/நாள். 25.07.2018ன்படி வழங்கியுள்ளதாகவும், இது குறித்து எங்களுக்கு நகராட்சி மூலம் எந்தத் தகவலும் அளிக்கவில்லை எனவும், மேற்படி சான்றினை ரத்து செய்ய கோரியுள்ளார்.

17.07.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான சிதம்பரம் நகராட்சி ஆணையர் தனது வாக்குமூலத்தில், முறையீட்டு மனுதாரரின் 30.11.2016 நாளிட்ட முறையீடு தொடர்பாக தற்போது ஒரு அறிக்கை சமர்ப்பிப்பதாகவும், கழிவு நீர் பாதை மூடப்பட்டு, கழிவு நீர் குளத்திற்கு செல்லாமல் பாதாள சாக்கடை கால்வாயில் இணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அதேபோன்று கிழக்கு கரையில் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் கட்டப்பட்டுள்ள பொதுக் கழிவறையின் கழிவு நீர் பாதாள சாக்கடையுடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். கிழக்கு கரையில் பொதுமக்களால் பயன்படுத்தி வரும் குடிநீர் தொட்டியில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் மழை நீர் வடிகாலோடு இணைக்கப்பட்டுள்ளதாகவும், கரையில் உள்ள மாட்டுக் கொட்டகைகள் முற்றிலுமாக அகற்றப்பட்டு, மாடுகள் கட்டுவது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளதாகவும், குளத்தின் வடக்கு மற்றும் தென்புற கரைகளில் ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை எனவும், தென்புற கரையில் மழைநீர் சேகரிப்பு தொட்டி ஒன்று கட்டப்பட்டுள்ளதாகவும், தற்போது மேற்படி இடத்தில் எவ்வித ஆக்கிரமிப்பும் இன்றி எந்த கழிவு நீரும் குளத்திற்கு செல்லாத வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி விவரங்களையே தெரிவித்து 15.07.2019 நாளிட்ட அறிக்கையினை சிதம்பரம் நகராட்சி ஆணையர் தனது வாக்குமூலத்துடன் சமர்ப்பித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, சிதம்பரம் நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரர் மற்றும் சிதம்பரம் நகராட்சி ஆணையர்ஆகியோர்களின் வாக்கு மூலம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது. சிதம்பரம் நகராட்சி ஆணையரின் 15.07.2019 நாளிட்ட வாக்குமூலத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையுடன் இணைத்தனுப்பப்பட்ட புகைப்பட நகல்களில் மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான விவரங்கள் உறுதி படுத்தப்பட்டுள்ளது. எனவே முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை சிதம்பரம் நகராட்சி ஆணையரால் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் நகராட்சி ஆணையரின் அறிக்கையினை ஏற்று இப்பொருள் தொடர்பான தொடர் நடவடிக்கையை கைவிடுவதென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 22–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்பட்டது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

பெறுநர்

1.திரு.பெரி.மெ.ப. பழனியப்ப செட்டியார்,
த/பெ திரு. சுப்பிரமணியன் செட்டியார்,
பரம்பரை அறங்காவலர்,
அருள்மிகு இளமையாக்கினார் திருக்கோவில்,
சிதம்பரம்.
கடலூார் மாவட்டம்–608 001.

2.நகராட்சி ஆணையர்,
சிதம்பரம் நகராட்சி,
கடலூார்மாவட்டம்–608 001.

செயலாளர். 8/8/2019

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்.
உதவிப் பிரிவு அலுவலர் (ஊராட்சிகள்) தகவலுக்காக.